[முற்பகல் 10·10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, Madras Metropolitan Water Supply and Sewerage Board அதாவது, சென்னை குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல் என்ற இலாக்கா என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால் நான் அதைச் சொன்னேன்.

பழத் தோட்டங்கள்

*வினா எண். 54—திரு. துரை முருகன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Hill Development திட்டத்தில், பழ அபிவிருத்திக்கென தனியாக தொகை ஏதேனும் அரசு ஒதுக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை அந்தக் காரியத்திற்கே செலவிடப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அந்தத் தொகையிலே இதுவரையிலே செலவிடப்பட்டது எவ்வளவு ? இந்தத் திட்டத்தை எந்தெந்த இடங்களில் அமல்படுத்தியிருக்கிறார்கள் என்ற விவரங்களை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78-இல் 51 ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது, 1978-79-இல் 75 ஹெக்டேரில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78-இல் 0.84 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 0·87இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1978-79-இல் 0.96 இலட்சம் ரூபாய் இத்திட்ட வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டு அந்தக் காரியத்திற்காகத் தொகை செலவிடப்பட்டு வருகிறது.

கிராமப்பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.

*வினா எண். 55—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கிராமப் பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைத்திடும் திட்டம் கிராம வாரியத்திடம் இருக்கிறதா ?

1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆம். ஈரோடு பகுதியில் நூறு தொழிலாளர்களுக்கு தோல்களைப் பதனட்டு அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்ய உதவும் வகையில் தோல் பதனிடுவதற்குப் பொது வசதிகளை நிறுவ முன்னோடித் திட்டம் ஒன்றை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தயாரித்துள்ளது. இத்திட்டம் வெற்றி பெற்றால், தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிரம்பியுள்ள பிற பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற தோல் பதனிடும் தொழிற்சாலைகளை அனுமதிக்கும் பொழுது சுற்றுப்புற சுகாதாரம், குடிநீர் பாதுகாப்பு ஆகியவை பாதிக்கப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது. இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, குரோமியம் டேனரி என்று சொல்லப்படுகிற இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கும் இடத்தில் சுற்றுப்புறப் பாதுகாப்பு பாதிக்கப்படுவதாகப் புகார் வந்ததையொட்டி அரசு பல்வேறு முன்யோசனைகளைத் தோல் பதனிடுபவர்களுக்கு வழங்கி இருக்கிறது. அதன்படி தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 'அப்ளுஅண்ட் ட்ரீட் மெண்ட்' என்ற வகையில், கழிவுநீரை ஒரேயிடத்தில் தேக்கி பரவலாக ஆக்காமல், பக்கத்திலே உள்ள மக்களுக்குக் குடிநீருக்குப் பாதிப்பு ஏற்படாமல் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சொ. ந. பழனிச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது மானியம் அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிலில் ஈடுபடும் முயற்சியிலே உள்ளவர் களுக்கு மானியமாக 750 ரூபாயும், மூலதனக் கடனாக 750 ரூபாயும், நடைமுறை மூலதனமாக 3,000 ரூபாயும் ஆக மொத்தம் 4,500 ரூபாய் வரை நாம் வாரியத்தின் மூலம் வழங்குகிறோம். இப்படி 150 தோல் பதனிடுபவர்களுக்குத் தனித் தனியாக இந்தக் கடன தொகைகளை நாம் வழங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுற்றுப் புறங்களிலே உள்ள கிராமத்தில் இருக்கின்ற குடிநீரைப் பாழாக்கு

கிறது, ஏரியில் கலந்து பயிர் விளையாவண்ணம் செயல்படுகிறது. இவற்றையெல்லாம் தடுக்க சுகாதார முறையிலே ஒரேயிடத்தில் தேக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி அரசு ஆணையிட்டு டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் ஒரே யிடத்தில் டேங்க் கட்டி தேக்காவிட்டால் அனுமதி மறுக்கப்படும் என்று தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் குறிப் பாக, இராணிப்பேட்டையைப் பொறுத்த வரையில் 48 பேக்டரிகள் இருக்கின்றன, 2 பேக்டரிகளைத் தவிர பாக்கியுள்ள எல்லா பேக்டரிகளிலும் அது போன்ற நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. இதனால் சுற்றுப்புற கிராமங்களில் பயிர் செய்ய முடிய வில்லை. துர்நாற்றம் தாங்க முடியாமல் இருக்கிறது, குடிநீர் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசு இந்தப் பிரச்னையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, சுற்றுப்புறம் இந்த வகையிலே பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து Affluent treatment plant வைக்க வேண்டு மென்று அரசு சொல்லியிருக்கிறது. ஆனால், இதிலே உள்ள நடைமுறை பிரச்னை ஒன்றை நாம் கவனிக்கவேண்டும், கிட்டதட்ட ரூ. 2 இலட்சத்துக்கு மேல் செலவு செய்ய வேண்டியிருக்கிறது ஒரு Affluent Treatment plant நிறுவுவதற்கு. எனவேதான் அரசு மாற்று யோசனையாக 'டானரீஸ்' வைத்திருப் பவர்கள் 10, 15 பேர் பெரிய அளவிலே இந்த மாதிரியான நீரை சுத்தப்படுத்துகின்ற அமைப்பை ஏற்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறது. அதுவரை அவர்களுக்கு அவ்வப்போது காலக்கெடு நீட்டிக்கப்பட்டிக்கிறது. இப்பொழுது இறுதியாக இந்த ஆண்டுக்குள் அவர்கள் செய்யவில்லையென்றால் அவர்களுக்கு வழங்கப்படுகிற உரிமம் திரும்பவும் வழங்கப் படாத சூழ்நிலை வரும் என்று அத்தொழிற்சாலை உரிமை யாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அரசினுடைய அறி வுரையை ஏற்று அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இப்படி கிராமப் புறங்களிலே தொழிலாளர்களுக்கு, ஏழைகளுக்குத் தோல் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்தும் அடிப்படையில் இது வரையில் எவ்வளவு கிராமங்களில் இந்தத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் பல இடங்களிலே வேலை நிறுத்தி விட்ட நிலையில் அக்கட்டிடங்களிலே கூட மனிதர்கள் இல்லை. இப் பொழுது மிருகங்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

1979 பிப்ரவரி 14]

என்னுடைய தொகுதியிலே சில பகுதிகளிலே, குறிப்பாக வளையாம்பட்டியிலே இப்படி தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலையிலே கழுதைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகளையெல்லாம் மீண்டும் நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன் வருமா? ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டவைகளில் எவ்வளவு தொழிற்சாலைகள் நடைபெறாமல் இருக்கின்றன? எவ்வளவு புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள்? புதிதாக எவ்வளவு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதாக உத்தேசம்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சில இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலை செயல்படாமல் இருப்பதாகவும் அதிலே ஒரு குறிப்பிட்ட இடத்தில் கழுதைகள் வந்து இருப்பதாகவும் சொன்னார்கள். ஒருவேளை கழுதைத் தோலுக்கு கிராக்கி இருக்கிறது என்று யாராவது கொண்டு வந்திருக்கலாம். ஆனால், பொதுவாக 1974-75-ல் 17 கிராம மாதிரி தொழில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலே 13 இலாபகரமாக இயங்கவில்லை. காரணம், தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சரியல்ல. இரண்டாவது, இப்பொழுது நாம் விவசாயத்திற்காக இறைவை இயந்திரங்களைப் பயன்படுத்துவதாலே கவலை மாடுகள் பூட்டி நீர் இறைக்கும் தோலைத்தான் அவர்கள் பதனிட்டு வந்திருக்கிறார்கள். அது தவிர, வேறுவித பயிற்சி அவர்களுக்கு இல்லை. இந்தக் காரணத்தினால் 13 இடங்களில் அத்தொழிற்சாலைகள் செயல்படாமல் போய்விட்டன. மீதி இருக்கும் 4-ம் சமயபுரம், ஆதிரெட்டிபாளையம், நல்லூர், கொங்கம்பாளையம் ஆகிய இடங்களில் இருக்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்து பழைய அனுபவங்களையும் நாம் எடுத்துக் கொண்டு புதிதாக எங்கெங்கே தோல் பதனிடும் தொழிற்சாலைகளை நிறுவினால் பலனளிக்கும் என்பதைப் பார்த்து, எங்கே எளிய முறையில் நமக்கு 'ராஸ்கின்' கிடைக்கும் என்பதைப் பார்த்து புதிதாக இடங்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அதிலே இன்னொன்று, 'கோவாப்பரேடிவ் சர்வீஸ் சொஸைட்டீஸ்' என்ற பெயரில் 'செமி ஃபினிஷ்ட் லெதராக' இல்லாமல், 'ஃபினிஷ்ட் லெதராக' தயார் செய்ய வசதி செய்கிற கூட்டுறவாக இது அமைந்திருக்கிற காரணத்தினால், அதையும் கவனத்திலே கொண்டு குறிப்பிட்ட இடங்களில் முக்கியமாக ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் அமைக்க இருக்கிறோம். வாணியம்பாடியைக் கூட கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம், உறுப்பினரவர்கள் சொல்கின்ற காரணத்தாலே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.